<u>சுருக்கம்</u>

யர்கல்வி – வேலைவாய்ப்பு – பாரதியார் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.இ. ட்டுமானம் மற்றும் போக்குவரத்து பொறியியல் (B.E. Civil and Transportation Engineering) பட்டப்படிப்பு – பி.இ. தானியங்கி பொறியியல் (B.E. Automobile Engineering) பட்டப்படிப்பிற்கு இணையானதாக கருதுதல் தொடர்பான ஆணை – வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜே2) துறை

அரசாணை (நிலை) எண்.22 நாள் 20.1.2009.

தை 7,
திருவள்ளுவர் ஆண்டு 2040.

<u>படிக்கப்பட்டவை:</u>

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் செயலாளர் (பொ), தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், கடிதம் எண்.5282/RND-F1/2007, நாள் 9.10.2007 மற்றும் 27.6.2008.

PPS5-584

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்/செயலாளர் (பொ), தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு, மோட்டார் வாகனக் கண்காணிப்பாளர், நிலை II பதவிக்கு நேரடித் தேர்விற்கு விண்ணப்பித்திருந்த ஒரு விண்ணப்பதாரர் பாரதியார் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.இ. (கட்டுமானம் மற்றும் போக்குவரத்து பொறியியல்) பட்டத்தினைப் பெற்றிருந்தார் என்றும், அப்பட்டமானது மோட்டார் வாகனக் கண்காணிப்பாளர், நிலை II பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியான பி.இ. (தானியங்கி பொறியியல்) பட்டப்படிப்பிற்கு இணையானதாகக் கருதலாமா என்பது குறித்து முடிவெடுக்க, இப்பொருளானது 4.9.2007 அன்று நடைபெற்ற 'இணைத்தகுதிக்குழு' வில் வைக்கப்பட்டது என்றும், அக்குழுவானது, வேலைவாய்ப்பிற்காக பாரதியார் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.இ. (கட்டுமானம் மற்றும் போக்குவரத்து பொறியியல்) பட்டப்படிப்பினை பி.இ. (தானியங்கி பொறியியல்) பட்டப்படிப்பிற்கு இணையானதாக கருத பரிந்துரைக்கவில்லை என்றும் இது தொடர்பாக ஆணை வெளியிடுமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேற்கண்ட தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் செயலாளர் (பொறுப்பு), தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–2 அவர்களின் கோரிக்கையை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்றுக் கொள்ள முடிவு செய்து, வேலை வாய்ப்பிற்காக பாரதியார் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.இ. கட்டுமானம் மற்றும் போக்குவரத்துப் பொறியியல் (B.E. Civil and Transportation Engineering) பட்டப்படிப்பு பி.இ. தானியங்கி பொறியியல் (B.E. Automobile Engineering) பட்டப்படிப்பிற்கு இணையானதாகக் கருத இயலாது என அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.குற்றாலிங்கம்,
அரசு முதன்மைச் செயலாளர் (பொறுப்பு)

பெறுநர்

செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–2.
முதன்மைச் செயலாளர்/தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
பதிவாளர்கள், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை/திருச்சிராப்பள்ளி/
கோயம்புத்தூர்/திருநெல்வேலி.
பதிவாளர், பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.
பதிவாளர்கள், அனைத்து பல்கலைக்கழகங்கள்.

நகல்

பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, சென்னை–9.
பொதுப்பணித் துறை, சென்னை–9.
உயர்கல்வித்துறை அனைத்துப் பிரிவுகள்.
இ.கோ./உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்